12.03.2025

**OS. 353 / 2023 வா. சா. 1. தங்கராசு , த/பெ. முத்தடைக்கன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>1 ,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 அயிட்ட சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தேக்காட்டூர் வருவாய் கிராமம் எந்த ஆண்டு இனாம் கிராமாமாக அறிவிக்கப்பட்டது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அதே மாதிரி அந்த கிராமத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து எந்த ஆண்டு செட்டில்மென்ட் விசாரணை நடைபெற்றது என்றால் 1989. புல எண் 480/12 ன் மொத்த விஸ்தீரனத்தில் ஒரு பகுதி எனது தந்தை மரக்காயன் என்ற முத்தடைக்கனால் அனுபவிக்கப்பட்டு வந்து அவர் காலமானதன் பிறகு அவரது வாரிசுகளான எங்களால் அனுபவிக்கப்பட்டு வந்தது என்றால் சரிதான். செட்டில்மென்ட் விசாரணையின் போது புல எண் 480/12 எனது தந்தை பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டு அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் பெயரில் அந்த கூட்டு பட்டா ஏற்ப்பட்டது என்றால் சரிதான். வா.சா. ஆ. 2, 3 ஆனது புல எண் 480/12 ல் எங்கள் குடும்பத்திற்கு சொத்து இருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவனங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா. ஆ.3 இல் கண்டுள்ள மரக்காயன் என்ற முத்தடக்கன் மக்கள் பெரியசாமி, இளவல் தங்கராசு, இளவல் கண்னையா ஆகிய மூவரும் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 இன் படி எங்கள் குடும்பத்திற்கு புல எண் 480/12 இல் 20ஏர்ஸ் கொண்ட சொத்து பாத்தியம் என்று கட்சி செய்து வருகிறேன். வா.சா. ஆ. 3 இல் எங்கள் குடும்பத்திற்கு 20 ஏர்ஸ் பாத்தியமாக இருந்தது என்பதற்கு எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். புல எண் 480/12 இல் எவ்வளவு ஏர்ஸ் கொண்ட சொத்தினை இருவார சகிதமாக உளவு செய்து அனுபவித்து வந்ததற்கு ஆவணம் எதுவும் வைத்துள்ளேனா என்றால் எதுவும் இல்லை. புல எண் 480/12 ஐ பொறுத்து எங்கள் குடும்பத்தில் எந்த ஆண்டு பாகம் பிரித்து கொண்டதாக சொல்கிறேன் என்றால் 2006 ல் பிரித்து கொண்டோம். அது எந்த மாதம் எந்த தேதி என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 2006ல் குடும்பத்தில் உள்ள மொத்த சொத்துக்களை பிரித்து கொண்டோமா என்றால் புஞ்சை நிலங்களை மட்டும் பிரித்து கொண்டோம். நஞ்சை நிலங்களை அப்போது பிரிக்கவில்லை. இந்த வழக்கிற்காக 2006ல் வழக்கு புல எண் உள்ளிட்ட சொத்துக்களை பொறுத்து வாய் மொழியாக பாகம் பிரித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண் 480/12 ல் எங்களது குடும்பத்திற்கு 10 ஏர்ஸ் மட்டுமே பாத்தியம் என்றும் 20 ஏர்ஸ் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி புல எண்ணில் 20 ஏர்ஸ் கொண்ட சொத்தினை பொறுத்து பாகம் பிரித்து கொண்டேன் என்று பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா. சா. ஆ.3 ல் கண்ட முத்தடைக்கன் மகன் ராமனுக்கு கருப்பையா , மாரிமுத்து என்று இரண்டு வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். வா.சா. ஆ.3இல் கண்ட சொத்தில் ராமனுக்கு உரிய பாகவீதத்தை பொறுத்து அவரது வாரிசுகளுக்கு சம உரிமை உள்ளது என்று சொன்னால் சரிதான். புல எண் 480/12 இல் ராமனுக்கு உரிய பாகவீதத்தை பொறுத்து ராமனின் வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா. சா. ஆ 1 ல் ராமன் மகன் கருப்பையா தன் தந்தைக்குரிய பாகத்தில் தனக்கு உரிய பாகமான 10 ஏர்ஸ் இடத்தை எனக்கு கிரையம் கொடுத்தாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா. ஆ.1ல் ராமன் மகன்கள் வாய்மொழி பாகம் பிரித்து கொண்டதாக எந்த வாசகமும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எந்த ஆண்டு வாய்மொழி பாகம் பிரித்து கொண்டார்கள் என்ற விவரம் நான் கருப்பையாவிடம் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். வா. சா. ஆ.1ல் கண்ட சொத்தினை கருப்பையாவிற்கு மட்டும் பாகமாக ஒதுக்கியதற்கோ கருப்பையா தனித்து அனுபவித்து வந்ததற்கோ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பிராதிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளது போன்று புல எண் 480/12இல் ராமனுக்க உரிய பங்கு வீதம்மானது கருப்பையாவிற்கு மட்டும் பாகமாக ஒதுக்கப்படவில்லை என்றும் ராமனின் வாரிசுகளான கருப்பையாவும் மாரிமுத்துவும் மேற்படி புலஎண்ணில் ராமனுக்கு உரிய பாகவீத்தை பொறுத்து 2007ஆம் ஆண்டிலேயே 2ம்பிரதிவாதி பெயருக்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்து விட்டார்கள் என்று சொன்னால் என்றால் எனக்கு தெரியாது. அந்த பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் 2 ம்பிரதிவாதி 1 ம்பிரதிவாதிக்கு கிரையம் எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.